## தி பீம்

மியூடோ லபேஸின் தயாரிப்பான 'தி பீம்', நறுமணவியலுடன் 'எகியுபிரஷர்', அதாவது நம் உடலிலுள்ள நரம்புகளைச் சுற்றியிருக்கும் பகுதிக்கு அழுத்தம் கொடுக்கும் சிகிச்சைமுறையின் கோட்பாடுகளையும் ஒன்றிணைக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள், உளவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகளுடன் இக்கருவி தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களுடைய மனநிலை சோர்வடைந்திருக்கும் தருணங்களில், இக்கருவி இயற்கையான முறையில் உங்களுக்கு உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்கும்.

மேலும் விவரங்களுக்கு www.mudolabs.com என்ற எங்களுடைய இணையத்தளத்தை நீங்கள் நாடலாம்.

## கருவி செயற்படும் முறை

நீண்ட காலமாக இருந்து வந்துள்ள இயற்கை நலன் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த பழக்க வழக்கங்களையும் அறிவியலையும் ஒன்றிணைக்கிறது.


மேல் உதட்டின் மேற்பகுதியில் (ஜிவி26) உள்ள நரம்புகளைச் சுற்றியிருக்கும் பகுதிக்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணம் இந்த கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் வழி, கருவியைப் பயன்படுத்துபவர்கள் அமைதியாகவும் நிதானமாகவும் உணர்வார்கள். அவர்களின் கவனத்தன்மையும் மேம்படும்.

அறிவியல் ஆதாரங்களின் துணைகொண்டு, வாசனைத் திரவிய தயாரிப்பாளர்களாலும் நறுமணவியல் வல்லுனர்களாலும் இயற்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட எண்ணெய்களை இந்த கருவிக்கான கார்ட்ரிட்ஜுகள் கொண்டுள்ளன. இவ்வாறு நம் மனதுக்கு உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்கும் வெவ்வேறு கார்ட்ரிட்ஜுகளை நீங்கள் 'தி பீம்' கருவியுடன் பொருத்திப்பார்த்து பயன்படுத்தலாம்

THE BEEM
使用手册


## கருவியைப் பொருத்தும் முறை

1



'தி பீம்' கருவியின் மேற்பகுதியில் இருக்கும் உலோக மூடியை அகற்ற, அதன் உடற்பகுதியை

2




'தி கார்ட்ரிட்ஜை' சுற்றியிருக்கும் அலுமினிய பேக்கேஜிங்கை அகற்றுங்கள்.

3




'தி கார்ட்ரிட்ஜின்' மேலும் கீழும் இருக்கும் சிலிக்கோன் 'சீல்'களை அகற்றுங்கள்.
(குறிப்பு: நீங்கள் வெவ்வேறு கார்ட்ரிட்ஜ்களை மாற்றிப் பயன்படுத்தும்போது, ஏற்கனவே பயன்படுத்திய கார்ட்ரிட்ஜ்களை மறுபடியும் 'சீல்' செய்து மூடி வைப்பதற்காக சிலிக்கோன் 'சீல்'களை பத்திரப்படுத்தி வைக்கலாம்.)

4




ஊசியின் அளவிருக்கும் இரு

5



'கிளிக்' சத்தம் கேட்கும்வரை 'தி கார்ட்ரிட்ஜை', 'தி பீம்' கருவியின்


6



'தி பீம்' கருவியின் உடற்பகுதியை மீண்டும் அதன் உலோக மூடியுடன் ஒன்றாகப் பொருத்துங்கள். இப்போது கருவி மூடப்பட்ட நிலையில் உள்ளது.


## கருவியைப்

1




'தி பீம்' கருவியின் உடற்பகுதியை 180 டிகிரி அளவு திருப்புங்கள். அதன் பிறகு 'தி பீம்' கருவியை

2




'தி கார்ட்ரிட்ஜின்' திறக்கப்பட்ட நுனிப்பகுதியினை, உங்களுடைய மேல் உதட்டின் மேற்பகுதியில் (GV26) உள்ள நரம்புகளைச் சுற்றியிருக்கும் பகுதியில் வையுங்கள்.

3




உங்களுடைய நுரையீரல் சுவாசக்காற்றால் முழுமையாக நிரம்பிவிட்டதாக நீங்கள் உணரும்வரை, தொடர்ச்சியாக ஒரே மூச்சில் உங்களுடைய மூக்கின் வழி மெதுவாக காற்றை உள்ளிழுங்கள்.

4




உங்களுடைய நுரையீரல் சுவாசக்காற்றால் முழுமையாக நிரம்பிவிட்டதாக நீங்கள் உணரும்வரை, தொடர்ச்சியாக ஒரே மூச்சில் உங்களுடைய மூக்கின் வழி மெதுவாக காற்றை உள்ளிழுங்கள்.

5




உள்ளிழுத்த மூச்சை ஐந்து வினாடிகள் வரை பிடித்திருங்கள்.

6



உள்ளிழுத்த மூச்சை மெதுவாக வெளியே விட்ட பிறகு, இயற்கையாக மூச்சை இழுத்து விடுங்கள். இவ்வாறு மெதுவாக மூச்சை உள்ளிழுத்து, ஐந்து வினாடிகள் வரை பிடித்து பின்பு மூச்சை விடுவதை நீங்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் செய்து பார்க்கலாம்.



எச்சரிக்கை: இக்கருவி நம் உடற்பாகங்களின் வெளிப்புறத்தில் பயன்படுத்துவதற்கு மட்டுமே. இக்கருவியின் எந்த பகுதியையும் வாய்வழி உட்கொள்ளாதீர்கள். இக்கருவி உங்களுடைய கண்களினுள் படாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். குழந்தைகள் இக்கருவியைப் பயன்படுத்தாதவாறு எச்சரிக்கையுடன் பார்த்துக்கொள்ளுங்கள். இக்கருவி சேதமடைந்திருந்தால் இதைப் பயன்படுத்தாதீர்கள்.

இயற்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட எண்ணெய்களால் உடலுக்கு ஒவ்வாமை ஏற்படக்கூடும். கருவியைப் பயன்படுத்தும்போது தோல் எரிச்சல் ஏற்பட்டால், கருவியைப் பயன்படுத்தாதீர்கள். ஒவ்வாமை சார்ந்த அறிகுறிகள் தொடர்ந்து இருந்தாலோ அல்லது மோசமடைந்தாலோ, மருத்துவரின் ஆலோசனையையும் உதவியையும் நாடுங்கள். உங்களுக்கு உடல்நலம் சார்ந்த மருத்துவ பிரச்சனைகள் இருந்தாலோ, நீங்கள் கர்ப்பமாக இருந்தாலோ அல்லது உங்களுடைய குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்துக்கொண்டிருந்தாலோ, இக்கருவியைப் பயன்படுத்துவதற்கு முன்பாக மருத்துவரின் ஆலோசனையை நாடுங்கள். இக்கருவி குழந்தைகளுக்குப் பொருத்தமானது அல்ல.

எந்த ஒரு நோயையும் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதோ, குணப்படுத்துவதோ அல்லது தடுப்பதோ இக்கருவியின் நோக்கமல்ல. ஏனெனில் இவற்றை செய்வதற்கான இக்கருவியின் திறனை உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறையினர் மதிப்பீடு செய்யவில்லை.

மற்ற மருத்துவ கருவிகளின் செயல்பாட்டுக்கு இடையூறு அளிக்கக்கூடிய, மின்காந்த புலம்களை வெளிப்படுத்தும் காந்தப் பண்புள்ள அம்சங்களை 'தி பீம்' கருவி கொண்டுள்ளது. எனவே, உங்களுடைய சொந்த மருத்துவ கருவி குறித்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள உங்களுடைய மருத்துவரை நாடுங்கள். 'தி பீம்' கருவியைப் பயன்படுத்துவது உங்களுடைய சொந்த மருத்துவ கருவியின் செயல்பாட்டுக்கு இடையூறாக உள்ளது என்று நீங்கள் சந்தேகித்தால், 'தி பீம்' கருவியைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடுங்கள்.

கருவியை பத்திரப்படுத்தி வைப்பதற்கான வழிமுறைகள்
குளுமையான, ஈரமில்லாத இடத்தில் கருவியை பத்திரப்படுத்தி வையுங்கள். சூரிய வெளிச்சம் கருவியின் மீது நேரடியாகப் படுவதை தவிர்த்துவிடுங்கள்.

கருவியை சுத்தம் செய்வதற்கான வழிமுறைகள்
கருவியின் மேற்பரப்பை சுத்தமான துணியைக் கொண்டு துடையுங்கள்.

"M", "MUDO LABS" மற்றும் "THE BEEM" ஆகியவை சிங்கப்பூரின் டிலைடெக்ஸ் பிரைவெட் லிமிடட்டின் (Delightex Pte Ltd) அதிகார்வப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட முத்திரைச் சின்னங்களாகும்.